பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 3உ (19—8—67) சனி ★ வெளியூர்: ஆவணி 4உ (20—8—67) ஞாயிறு [இதழ்: 55

மருத்துவமனையில் அமைச்சர் முத்துச்சாமி

தொண்டையில் அறுவைச் சிகிச்சை

சென்னை, ஆக. 19—

உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துச்சாமி அவர்களுக்குத் தொண்டையில் சதை வளர்ந்திருப்பதால் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவிருக்கிறார்.

தலைமை மருத்துவ மனையில் டாக்டர் சத்தியநாராயணா இந்த அறுவைச் சிகிச்சையை இன்று செய்கிறார்.

இவ்வறுவைச் சிகிச்சை முடிந்த பின் அமைச்சர் ஒரு வார காலம் மருத்துவமனையில் தங்கி மேலும் சிகிச்சை பெறுவார் எனத் தெரிகிறது.

'ஆங்கிலமே தொடர்புமொழியாக நீடிக்கவேண்டும்'

'ஆரியமொழிகளுக்கு இணையாக திராவிட மொழிகளை மதிக்க இதுவே வழி'

'இந்தி தொடர்புமொழியாக வளர இரண்டு நூற்றாண்டுகளாவது ஆகும்'

'தேவநாகரி வரிவடிவத் திணிப்பும் ஏற்கத்தக்கதல்ல-டில்லிக்கு தமிழக அரசு திட்டவட்டமான அறிவிப்பு

சென்னை, ஆக. 18—

"இந்தியாவின் தொடர்பு மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் வகையிலேயே மொழிக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

"ஆரிய மொழிக் குழுவுக்கு இணையான தகுதியுடன் திராவிட மொழிக்குழு இருக்குமாறு பார்த்துக்கொள்ள ஆங்கிலத்தைத் தொடர்ந்து இருக்கச் செய்வது ஒன்றே வழியாகும்.

"வெறுப்பு-விருப்புகளை மனத்தில் கொண்டு ஆங்கிலத்தைத் கைவிடுவது என்பது கூடாது.

"பிரிட்டிஷார் நம்மை ஆண்டார்கள் என்பதற்காக, ஆங்கிலத்தை இந்தியா புறக்கணிப்பது என்பது கூடாது. ஆங்கிலம், நமது மாநிலங்களுக்கிடையே தொடர்பு கொள்வதற்கு மட்டுமன்றி, உலகின் மற்றப் பகுதிகளோடும் தொடர்புகொள்ளப் பயன்படுவதாகும்"

என்று தமிழக அரசு, மத்திய அரசுக்குப் பயிற்சி மொழிபற்றி அனுப்பியுள்ள நிலை விளக்க அறிக்கையில் வற்புறுத்திக் கூறியுள்ளது. அந்த அறிக்கை கூறுவதாவது :—

"ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக நீடிப்பதன் மூலமே ஆரிய மொழிகளுடன் திராவிட மொழிகளை இணையாக்க முடியும் என்று தமிழக அரசு கருதுகிறது.

உலகில் பெரும்பாலான மக்களால் பேசப்படும் ஒரு மொழி ஆங்கிலமேயாகும். ஜப்பான், இரஷ்யா, போன்ற நாடுகளும் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்பிக்கின்றன.

மத்திய கல்வித் துறை அனுப்பிய குறிப்பில் கண்டிருந்த பின்கண்ட யோசனைகளைத் தமிழக அரசு ஏற்கிறது :—

1. ஒரே சமயத்தில் பிள்ளைகளுக்கு மூன்று மொழிகளைக் கட்டாயமாக்குவது பெருஞ்சுமையாக இருக்கும்; எந்தக் கட்டத்திலும் இரண்டு மொழிகளுக்கு மேல் கட்டாயமாகக் கற்பிக்கலாகாது.
2. ஒரே காலத்தில் எந்த இரு மொழிகளையும் புகுத்தக் கூடாது.
3. இரண்டாவது மொழி புகுத்தப் படுவதற்கு முன்பு முதல் மொழியைக் கற்கப் போதிய காலக்கெடு அளிக்கப்படவேண்டும். இதேபோல் மூன்றாவது மொழியைப் புகுத்துவதற்கு முன்பு இரண்டாவது மொழியைக் கற்க போதிய காலக்கெடு இருக்கவேண்டும்."

துவக்கக் கட்டத்திலேயே பிள்ளைகள் விரைந்து மொழியைக் கற்க வசதியாக இருக்கும் பொருட்டு ஆங்கிலத்தை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் கற்பிக்கத் துவங்கவேண்டும்.

மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கற்பது கடினமாக இராது. உண்மையில் தமிழகத்தில்—தற்கால ஆங்கிலக் கல்வி முறைப்படி—3-வதுவகுப்பிலிருந்தே வாய்மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. 4வது வகுப்பிலிருந்து ஆங்கில அரிச்சுவடி கற்பிக்கப்படுகிறது.

எல்லா மாநில மக்களாலும் புரிந்துகொள்ளக்கூடிய அல்லது பேசக்கூடிய மொழிகளைக் கொண்டு அளவுக்கு அதிகமான தொடர்பு மொழிகளை ஏற்பது சாத்தியமல்ல.

தற்போது தொடர்பு மொழியாக இருக்கத் தகுதிபெற்றது ஆங்கிலம்தான். காலம் செல்லச் செல்ல அநேகமாக ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி தொடர்பு மொழியாவது இயலக்கூடியதாக இருக்கலாம். 'ஏற்கனவே பெரும் அளவில் இந்தி தொடர்பு மொழியாகப் புழக்கத்தில் இருந்துவருகிறது' என்று கூறுவது சரியல்ல இந்தியாவில் வேறு மொழி தொடர்பு மொழியாக வருமென்று யூகிப்பதுகூட இயலாதது.

ஆகவே, முதலில் ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகவோ அல்லது அனைத்து இந்திய மொழியாகவோ நிறுத்திவைத்துக் கொள்வது இன்றியமையாததாகிறது.

இரண்டாவதாக திராவிட மொழிகளுக்குப் பாதகமான நிலைமை ஏற்படாவண்ணம்—இந்தி வழங்கப்படாத மாநிலங்களைக் கட்டாயப்படுத்தாவண்ணம் இந்தியை மற்றொரு தொடர்பு மொழி அல்லது அனைத்து இந்திய மொழியாக வளர்க்க வேண்டும்.

இந்தி வழங்கப்படாத மாநிலங்களில் இந்தியைத் தொடர்பு மொழியாகக் கட்டாயமாகக் கற்பிப்பதன் மூலம் அதைத் திணிக்க முயற்சித்தால், அந்த மாநிலங்களின் ஆத்திரத்தையும், ஐயப்பாட்டையும் கிளப்பும்! 'இந்தி மாநிலங்கள் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன' என்ற கருத்து ஏற்படவும் அது வழிகோலும்! இதனால் பல்வேறு மாநிலங்கள் ஒன்றுபடுவதற்குப் பதில் பிரிந்து செல்ல வழிகோலும்! தேசீய ஒருமைப்பாடு இலட்சியம் கைநழுவிவிடும்! இதன் விளைவை நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது!

கல்வித் துறையின் சுற்றறிக்கையில் கண்டுள்ள புதிய மும்மொழித் திட்டத்தைப் பின்கண்ட முறையில் மாற்றியமைக்க வேண்டும் என்று தமிழக அரசு கருதுகிறது;—

1. முதல் வகுப்பிலிருந்து 4-வது வகுப்பு வரையில் மாணவர்கள் தாய்மொழி அல்லது வட்டார மொழியைக் கற்க வேண்டுமென்பதைத் தமிழக அரசு முழுமையாக ஒப்புக்கொள்கிறது!
2. 5-வது வகுப்பு முதல் 7-வது வகுப்புவரையில் இந்தி தாய் மொழியாக இல்லாத மாணவர்களுக்கு ஆங்கிலம் அல்லது வேறு அயல் மொழியைக் கற்பிக்க வேண்டுமென்பதே தமிழக அரசின் கருத்து. இங்கும் இயல்பாக ஆங்கிலத்தையே மாணவர்கள் தேர்ந்தெடுப்பர். வேறு கட்டத்தில் இந்தியை விருப்ப பாடமாகக் கொண்டு வரலாம்.

இந்த யோசனையை ஏற்றால், ஆங்கிலத்தின் இடத்தை இந்தி அடையும்வரை ஆங்கிலத்தை இந்தியா முழுவதிலும் போதிப்பதுடன், பல்வேறு மாநிலங்களிடை கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள அது தொடர்பு மொழியாக நீடிக்கும். இதனால் எந்த மாநிலத்திற்கும் பாதகம் விளையாது.

கல்வித் துறை தெரிவித்த திட்டத்தை ஏற்றால், இந்தி மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்காத நிலைமை ஏற்படும்; இந்தி வழங்கப்படாத மாநிலங்களின் மாணவர்கள் இந்தியைப் படிக்கும் நிலைமை ஏற்படும்; இதன் விளைவாகத் தொடர்பு மொழி என்பதுடன் தேசிய ஒற்றுமை ஏற்படாமல் போகும்!

8-வது வகுப்பு முதல் 10-வது வகுப்புவரை இந்தி தாய்மொழியாக இல்லாத மாணவர்களுக்கு எது இரண்டாவது மொழியாக இருக்கவேண்டுமென்பது கல்வித் துறையின் குறிப்பில் காணப்படவில்லை. இக்கட்டத்தில் இந்தி அல்லது வேறு இந்திய மொழியை விருப்பப் பாடமாகக் கற்கலாம்; அல்லது, முதல் நான்கு வகுப்புகளில் கற்ற வட்டார மொழி அல்லது தாய் மொழியில் சிறப்புப் பாடத்தை (சிறப்புத் தமிழ்) கற்கலாம்.

'இந்தி வழங்கப்படாத பகுதிகளில் கன்னடம் அல்லது வங்காளி எழுத்தில் கற்கத் துவங்கலாம்; இம்மொழிப் பழக்கம் ஏற்பட்ட பிறகு, மொழிக் கல்வியின் இரண்டாவது ஆண்டில் தேவநாகிரி வரி வடிவத்தில் கற்பிக்கலாம்' என்று கூறப்பட்டுள்ளது.

கன்னடம் அல்லது வங்காளி மொழிகளுக்கு இது இயலக்கூடியதாக இருக்கும்; ஆனால் தமிழ் மொழித் தொடர்பாக இது இயலக்கூடியதல்ல; தமிழ் மொழி உச்சரிப்பு சமஸ்கிருத மொழியிலிருந்து வேறுபட்டது.

தமிழ், ரோமன் வரி வடிவங்களைக் கற்கும் மாணவர்கள், சமஸ்கிருதம் அல்லது இந்தியை விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டாலொழிய தேவநாகிரி வரி வடிவத்தைக் கற்பது கடினம்.

இந்தி உட்பட பிற மொழிகளை ரோமன் லிபியில் கற்பிக்கும் பிரச்சினை குறித்து ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும்.

சமஸ்கிருதத்தை விருப்பப் பாடமாகக்கூடக் கற்க ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் முன் வருவது குறைந்து வருவதால், இதை அனைவருக்கும் கட்டாயமாக்குவதன் மூலம் இதற்குப் புத்துயிர் அளிப்பது இயலக் கூடியதல்ல! பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இம்மொழியில் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு அதைக் கற்பிக்க அரசு வசதிகள் செய்துதர இயலும்."

இந்தியைத் திணித்தால் கடும் விளைவு ஏற்படும்

தென்னக மாணவர்கள் மீண்டும் கிளர்ந்தெழுவர்

நாடாளுமன்றக் காங்கிரசுக் கூட்டத்தில் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 18—

"இந்தியைத் திணிப்பதற்கு எந்தவித முயற்சி நடைபெற்றாலும், அதை எதிர்த்து உடனடியாகத் தென்னக மாணவர்கள் கிளர்ந்தெழுவார்கள்"

என்று, நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் பேரவைக் கூட்டத்தில், கடுமையான எச்சரிக்கை செய்திருக்கிறார்—தமிழகத்தைச் சேர்ந்த ஆர். டி. பார்த்தசாரதி என்னும் நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்!

"நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் நேரிடக் கூடிய அபாயத்தைத் தவிர்க்க வேண்டுமானால், மொழிப் பிரச்சினையைத் தேசியக் கண்கொண்டு இந்திக்காரர்கள் நோக்க வேண்டும்" என்று அவர் அறிவுறுத்தினார்.

மாநிலங்களுக்கு மும்மொழிக் கொள்கையும் மத்திய அரசுக்கு ஆங்கிலம்—இந்தி ஆகிய இரு மொழிக் கொள்கையும் வைத்துக்கொள்வது ஒன்றே சிக்கல் தீருவதற்கு இருக்கின்ற ஒரே வழியாகும்; இதனை ஏற்றுக்கொண்டாலே நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப் பட்டதாக ஆகிவிடும்" என்று அவர் மேலும் விளக்கினார்.

திரு. பார்த்தசாரதி மேலும் தெரிவித்ததாவது :—

"பல்கலைக் கழகக் கல்விக்கு ஆங்கிலம் தொடர்ந்து ஒரு முப்பதாண்டுக் காலத்துக்காவது நீடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

"ஆங்கிலத்தை உடனடியாக அகற்றிவிட்டு வட்டார மொழிகளைப் பயிற்சி மொழிகளாக்குவது என்பது, பிரிவினை உணர்ச்சியையே தூண்டும்."

இன்றையக் கூட்டத்தில் பேசியவர்களில் பெரும்பாலோர் இந்தி ஆதரவாளர்களாகவே இருந்தனர். சித்தேசுவர பிரசாத், டாக்டர் சுசிலா நய்யார் போன்றவர்கள், 'இந்தி மட்டுமே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்' என்றனர்.

"அந்நிய மொழி நமக்குத் தொடர்பு மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ இருப்பது நமது பண்பாட்டையே குலைத்துவிடும்" என்று சிலர் வாதிட்டனர்.

காஷ்மீரைச் சேர்ந்த ஏ. எம். டாரிக் என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும்; ஆனால் விருப்ப அடிப்படையில் இந்தியைப் பரப்பலாம்."

முன்னாள் சுகாதார அமைச்சரான டாக்டர் சுசீலா நய்யார் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மொழிக் கொள்கையில் புதுமை ஒன்றும் இல்லை.

"கல்வித் துறையில் நாடு முழுமைக்கும ஒரே மாதிரியான கொள்கை அனுசரிக்கப்படாவிட்டால், நாடு பிளவுண்டு விடும்,"

குசராத்தைச் சேர்ந்த டபுள்யூ. ஜி. மோமின் என்பார் பேசுகையில், 'ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கொண்டு வருவதற்கு ஒரு காலவரை வேண்டும்' என வற்புறுத்தினார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 3 (19—8—67) சனி

சுப்பிரமணியம் ‘புத்திசாலித்தனம்’!

கடந்த பொதுத் தேர்தலில் மண்ணைக் கவ்விய வரையில் மத்திய உணவு அமைச்சராக இருந்துவந்த சி.சுப்பிரமணியம், அதற்கு முன் தமிழகத்தின் நிதி அமைச்சராக ஐந்தாண்டுக் காலம் இருந்திருக்கின்றார். மத்திய அரசில் உணவு அமைச்சராக ஆக்கப்படுவதற்குமுன் அவர், உருக்கு அமைச்சராக இருந்தார்.

தமிழகத்தின் நிதி அமைச்சராக இருந்த நேரத்திலும், கல்வி அமைச்சராக இருந்த நேரத்திலும், சேலம் உருக்காலையைக் குறித்துப் பன்னிப்பன்னிப் பேசிவந்திருக்கின்றார். சேலம் உருக்காலையினால் குறிப்பாகத் தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய நல்ல விளைவுகள்பற்றியெல்லாம் அவர், வற்புறுத்தி வந்திருக்கின்றார்.

அதற்குப் பின்னர் மூன்றாவது பொதுத் தேர்தலில் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு—மத்திய உருக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு—சேலம் உருக்காலை நிறுவப்படவேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறியதுடன், அதன் துவக்க நாள் குறித்து, ‘இதோ—அதோ’ என்று நாளும் குறித்துக் கொண்டே இருந்தார்.

நான்காவது பொதுத் தேர்தலின்பொழுதுகூட, தாம் கலந்துகொண்ட தேர்தல் பொதுக்கூட்டங்களிலெல்லாம், சேலம் உருக்காலையின் அவசியம் பற்றிப் பல்லவி பாடிக்கொண்டு வந்தார். ‘நிச்சயம், நிச்சயம்’—‘உறுதி, உறுதி’ என்றெல்லாம், பொது மேடைகளில் மார்தட்டிச் சூளுரைத்துக் கொண்டிருந்தார் சுப்பிரமணியம்!

ஆனால் இப்பொழுதோ, அதே சுப்பிரமணியம், ‘சேலம் உருக்காலைக்கு இப்பொழுது அவசரமில்லை’ எனக் கூற முன்வந்திருக்கின்றார்.

‘தமிழகத் தொழில் வளர்ச்சி சேலம் உருக்காலையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது’ எனத் திரும்பத் திரும்பக் கூறி, அவ்வாலையைக் குறித்துத் தமிழக மக்களிடம் ஆசையைக் கிளப்பிவிட்டுவந்த இந்தக் கோவைப் பெருந்தகை, தாம் நேற்றுவரை சொல்லி வந்திருக்கின்ற அனைத்துக்கும் முரண்பட, இன்று ஏன் பேசக் கிளம்பி இருக்கின்றார்? அவருடைய முரண்பட்ட பேச்சின் மறைபொருள்தான் என்ன?

நமது முன்னேற்றக் கழகம், ஆட்சிபீடத்திலிருந்துகொண்டு சென்ற திங்கள் இருபத்து மூன்றும் நாள், சேலம் உருக்காலைக்காக ‘எழுச்சி நாள்’ கொண்டாடியிருப்பதை, கோவையாரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை; கழக ஆட்சி கொண்டாடிய ‘எழுச்சி நாள்’ அவருக்கு ஆத்திரத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்டிருக்கிறது!

தமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஆத்திரத்தையும் எரிச்சலையும் வெளியிட்டுக் கூறி, தமது நெஞ்சுக்கு அமைதி தேடிக்கொள்ளவும், அதே நேரத்தில் கழகத்தைச் சாடவும், ‘சேலம் உருக்காலை இப்பொழுது தேவையில்லை’ எனக் கூற சுப்பிரமணியம் அவர்கள் முன்வந்திருக்கின்றார். அவருடைய முரண்பட்ட பேச்சு, நகைப்புக்குரியதாக இருக்கிறது!

இதற்கு அவர் கூறும் காரணம், சேலம் உருக்காலை பற்றி அவர் முரண்படப் பேசியிருப்பதனால் ஏற்படக்கூடிய வியப்பைவிட, மிகுதியான வியப்பைத் தரக்கூடியதாக உள்ளது.

“நாட்டின் பொருளாதார நிலை சரியாக இல்லை. அத்துடன் உருக்குக்குக் கிராக்கி இல்லை.”

பொதுத்தேர்தலுக்குப் பின்னர்தான், சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருப்பதுபோல், நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து அல்லது தேக்கமடைந்திருக்கிறது என்பதில்லை. இவர் உருக்கு அமைச்சராக இருந்துவந்த நேரத்திலேயே, நாட்டின் பொருளாதார நிலை தேக்கமடைந்துதான் கிடந்தது. சென்ற பொதுத்தேர்தலின் போது, அந்த நிலை மேலும் சீரழிந்துபோயிருந்தது.

நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்பட்டுவிட்ட இந்தத் தேக்கத்தை சுப்பிரமணியம் அவர்கள், அப்பொழுதே அறியாமல் இருக்க நியாயமில்லை. அதை அறிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் அவருக்குக் கிடையாது எனக் கூறக்கூடிய சிறுமதி நமக்குக் கிடையாது.

நாட்டின் பொருளாதார நிலை தேக்கமடைந்திருப்பதை, கழக ஆட்சி, ‘எழுச்சி நாள்’ கொண்டாடிய இருபத்துமூன்றும் நாளுக்குப் பின்னர்தான், தாம் முதன்முதலாகக் கண்டறிந்தவர்போல் அதைக் காரணமாகக் காட்டி, ‘சேலம் உருக்காலைக்கு இப்போது அவசியமில்லை’ என அவர் பேசியிருப்பது விந்தையாக மட்டும் அல்லாமல், நம்பத்தகாததாகவும் இருக்கிறது.

சுப்பிரமணியம் அவர்களுக்கு, நாணயத்திலும் நேர்மையிலும் கடுகளவாவது நம்பிக்கை இருந்திடும்பட்சத்தில், அவர் இப்பொழுது கூறியிருப்பதை அப்பொழுதே கூறியிருக்கவேண்டும். அப்பொழுது, அவருடைய நேர்மையையும் நாணயத்தையும் நம்மால் புரிந்துகொண்டு பாராட்டியிருக்க முடியும்—அவருடைய கூற்றை நாம் ஏற்க மறுத்திட்டாலும்!

இந்தக் காரணத்தைப்போலவேதான்—‘உருக்குக்குக் கிராக்கி இல்லை’ என அவர் சுட்டிக்காட்டியிருக்கின்ற மற்றொரு காரணமும்!

“உருக்கிற்கு உலகத்தில் கிராக்கி குறைந்துவிட்டது; உலகச் சந்தையில் உருக்கின் விலை சரிந்துவிட்டது” என்ற செய்தியும், சென்ற சில ஆண்டுக்காலமாகவே அடிபட்டு வருவதுதான்! சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருப்பதுபோல், ‘உருக்கிற்குக் கிராக்கி இல்லை’ என்பதும், இன்றுதான் அவரால் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதில்லை.

“இந்த நிலைமையில், ரூ. 100 கோடி செலவில் உருக்காலையை சேலத்தில் நிறுவுவது புத்திசாலித்தனமல்ல.”

இதுவும், அறிவுக்குன்றான சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்துத்தான்.

100 கோடி ரூபாயைச் செலவழித்து சேலம் உருக்காலையைத் துவங்குவது ‘புத்திசாலித்தனமல்ல’ என்கிறார்—கோவை அறிஞர்; இதை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்.

சோவியத் இரஷ்யாவின் ஒத்துழைப்புடன் துவங்க முயற்சிக்கப்பட்டுவரக்கூடிய பொக்காரோ உருக்காலையின் மூலதனச் செலவு 900 கோடி ரூபாய்க்கும் கூடுதலாகும். இதனை, சுப்பிரமணியம் அவர்களும் அறிவார்.

நாட்டின் பொருளாதார மந்தத்தையும், ‘உருக்குக்குக் கிராக்கி இல்லை’ என்பதையும் காரணமாகக் காட்டி, 100 கோடி ரூபாய் மூலதனத்தில் துவங்கப்படக்கூடிய சேலம் உருக்காலையை இப்பொழுது துவங்கவேண்டிய தேவை இல்லை என்றும், துவங்க வேண்டும் எனக் கோருவது ‘புத்திசாலித்தனமல்ல’ என்றும், தஞ்சைத் தரணியில் மார்தட்டி—வீரம் சொட்டக் கொக்கரித்திருக்கின்ற கோவை பொருளாதார மேதை, அதே தமது மேதாவிலாசத்தை, ‘பொக்காரோ உருக்காலையை இப்பொழுது துவங்க வேண்டாம்’ எனக் கூறி வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படி சுப்பிரமணியம் அவர்கள் கூறும்பட்சத்தில், அவருடைய புத்திசாலித்தனத்தை மட்டுமல்லாது, அவருடைய நெஞ்சத் துணிவையும் தமிழ் மக்களால் தெரிந்துகொள்ள முடியும். நம்மாலும் பலப்படப் பாராட்ட முடியும்.

‘பொக்காரோ ஆலை வேண்டாம்’ என, ‘புத்திசாலித்தன’மாகச் சுப்பிரமணியம் அவர்கள், வெளிப்படையாகக் கூறுகின்ற நன்னாளை நாம் எதிர்பார்க்கின்றோம். நம்மை ஏமாற்றிவிடமாட்டார் என்றே நம்புகிறோம்.

—கா. க.

பாவம், இந்தி!

“இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைப் பாட மொழியாகக் கொண்ட கல்லூரிகளைத் திறப்பதற்குத் தேவைப்படும் செலவுத் தொகையை நூற்றுக்கு நூறு பங்கும் ஏற்றுக்கொள்வதாக மத்திய அரசு கூறியிருந்தும்கூட, இதுவரை இந்தி பேசாத மாநிலங்களில் ஒன்றுகூட அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை”

என்று டில்லி அமைச்சர் ஷேர் சிங், பெங்களூரில் பேசுகையில் கூறினார்.

“இப்போதும் மத்திய அரசின் கதவுகள் திறந்தே உள்ளன” என்றும் அவர் கூறினார்.

இந்தியை ஏற்க மறுப்பவர் தகுதியிழந்துவிடுவராம்

இந்திரா காந்தியின் கண்மூடித்தனமான பதில்

ஒவ்வொருவரும் மூன்று மொழிகளைக் கற்க வேண்டுமாம்

புதுடில்லி, ஆக. 17—

“ஆங்கிலம் இருக்கும் இடத்தை இந்தி பிடித்துக்கொள்ளப்பட்ட பின்னரும், தமிழ் நாட்டு மக்கள் இந்தியை ஏற்றுக் கொள்ள மறுத்தால் நிலைமை என்ன ஆகும்?” என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் கேட்டதற்கு, ‘அவர்கள் தகுதியற்றவர்களாகிவிடுவார்கள்’ என்று பதிலளித்திருக்கிறார் இந்திரா!

‘ஆங்கிலத்தை நீடிக்கச் செய்ய வேண்டும்’ என்று கோரும் மனு ஒன்றை தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆர். டி. பார்த்தசாரதி தலைமையில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், இந்திரா காந்தியிடம் கொடுத்தனர்.

இந்தக் குழுவினரின் கேள்விக்குத்தான் இந்திரா மேற்கண்டவாறு கண்மூடித்தனமான இந்தப் பதிலைத் துணிந்து கூறியிருக்கிறார்.

“இரு நூறு ஆண்டுகளுக்குமேல் பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருந்தும் நாட்டின் ஒரு சதவிகித மக்களே ஆங்கிலம் அறிந்திருக்கிறார்கள்” என்றும் அவர் சுட்டிக்காட்டினாராம்!

வட்டார மொழிகள் மூலம் ஆங்கிலத்தை அகற்றுவதற்கான காலவரை நிர்ணயிப்பதைத் தாம் ஆதரிக்கவில்லை என்றும், அதே நேரத்தில், ஒவ்வொருவரும் மூன்று மொழிகளைக் கட்டாயம் கற்றுத் தீரவேண்டும் என்றும் அதாவது, வட்டார மொழி—இந்தி — ஆங்கிலம் ஆகியவற்றை இந்தி பேசாத மக்களும், இந்தி பேசுவோர், இந்தி—ஆங்கிலம் ஆகியவற்றுடன் ஏதாவது ஒரு தென்னிந்திய மொழியையும் கற்கவேண்டும் என்றும் இந்திரா காந்தி கூறினாராம்.

பயிற்சி மொழி மாற்றம்—முடிவு தள்ளிப் போடப்படுகிறது

எதிர்ப்புக் குரல்கள் கண்டு டில்லியின் போக்கில் திருப்பம்?

ஆட்சி மொழித் திருத்த மசோதாவும் ஆறப் போடப்படுமா?

புதுடில்லி, ஆக. 17—

பல்கலைக் கழகக் கட்டப் பயிற்சி மொழியை ஆங்கிலத்திலிருந்து வட்டார மொழிகளுக்கு மாற்றுவது குறித்து இறுதி முடிவு செய்வதை, மத்திய அமைச்சரவை ஒத்திப்போட்டுவிட்டது.

அதேபோல், ஆங்கிலத்தைக் காலவரையின்றி துணை ஆட்சி மொழியாக நீடிக்க வகை செய்யும் மசோதா பற்றிய முடிவையும் தள்ளிப் போட்டுவிட்டது.

கல்விக் கமிஷன், அறிக்கையை நாடாளுமன்ற மக்களவை விவாதிக்க வேண்டியிருப்பதாலும், ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக இருப்பதிலிருந்து நீக்குவதற்கு எதிர்ப்பான கருத்துக்களை அறிந்து கொள்ள அரசு விரும்புவதாலுமே, பயிற்சி மொழி பற்றிய முடிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

நாடாளுமன்றத்தின் அடுத்தத் தொடர்க்கூட்டம் நவம்பரில் துவங்குகிறது. அதற்கிடையில், இது பற்றி மக்களிடையே என்ன கருத்து நிலவுகிறது என்பதை நன்கு கண்டறிய அரசுக்கு போதிய காலம் இருக்கிறது.

பயிற்சி மொழி பற்றி எடுக்கப்படும்முடிவு, ஆட்சிமொழித்திருத்த மசோதாவின் ஒரு கூறாக அமையும் என்று தெரிகிறது. இந்த மசோதா அடுத்த தொடர் கூட்டத்தில் கொண்டுவரப்படுமாம்.

“பயிற்சி மொழியிலிருந்து ஆங்கிலத்தை அகற்றும் முயற்சிக்கு எதிராகப் புரட்சி செய்யவேண்டும்” என்று இராஜாஜி போன்றவர்கள் கூறியிருப்பது மட்டுமன்றி, கல்வியாளர்கள் எழுப்பியுள்ள எதிர்ப்புக் குரல்களும், அரசினரை இத்துறையில் சற்று நிதானித்துச் செயல்படச் செய்திருக்கின்றன.

பல்கலைக் கழகங்களில் பட்டப் பிறகாலப் படிப்பு, அனைத்திந்தியத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையங்கள், பம்பாய்—கல்கத்தா—சென்னை—டில்லி போன்ற பல மொழிகள் வழங்கும் மாநகரங்கள் ஆகியவற்றின் நிலை என்ன என்பதும் தற்போது ஆலோசிக்கப்படுகிறதாம்.

கடல் கடந்த நாட்டிலும் இந்தி தேடிக்கொண்ட பகை!

முப்பதாண்டுக்கு முன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி!

“சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படித்தவர்களுக்கு, வயிற்றுக் கஞ்சிக்காகத் தொலை நாடுகளில் சென்று வாடிக் கொண்டிருக்கும் இந்தியர்களைப் பற்றிப் படிக்கும்பொழுதெல்லாம், பீஜித் தீவுகளில், ‘கரும்புத் தோட்டத்திலே கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்திக் கொண்டிருந்த’ ஏழைத் தொழிலாளிகளைப் பற்றிய அவரது பாடல், நினைவிற்கு வராமல் இருக்காது!

“அந்த நாட்களில் பீஜித் தீவில் உழைத்துவந்த இப்படிப்பட்ட தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஓர் இலட்சம் பேர் இருந்தனர்; இவர்களில்—தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, குசராத்தி, பஞ்சாபி, உருது, இந்தி போன்ற பல்வேறு இந்திய மொழிகளைப் பேசுகிறவர்களும் இருந்தார்கள்.

“முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தென்னிந்தியர் இந்தத் தீவுகளில் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் நிலைமையைக் கற்றறிவதற்காக அங்கே சென்றிருந்தார். ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேச விரும்பிய பொழுது அந்த இந்தியர்கள், ‘அவர் தனக்குத் தெரிந்த எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசட்டும்; ஆனால், இந்தியில் மட்டும் பேசக்கூடாது’ என்று பணித்தார்களாம்.

“அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களின் இந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, அவருக்கு வியப்பை அளித்திருக்கிறது. அவர், இதன் காரணத்தை ஆராயத் தொடங்கினார்.

“‘பீஜித் தீவுகளில் ஆட்சி புரிந்து வந்த ஆங்கில அரசாங்கம், பல்வேறு இந்திய மொழிகளைப் புறக்கணித்து இந்தியை மட்டும் பள்ளிகளில் பாடமொழியாக்கியதாலும், ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த சில வகுப்புவாதிகள், ‘இந்தி, கடவுளர்களின் மொழியில் வந்தது’ என்று கூறியும், மற்ற மொழிகளைப் பழித்தும் வந்ததனால்தான் இந்த எதிர்ப்புணர்ச்சி தோன்றியுள்ளது’ என்பதை அவர் கண்டறிந்தார்.”

—[‘டெக்கான் ஹெரால்டு’ 3—8—67 இதழில், திரு. பி. கோதண்டராவ் என்ற எழுத்தாளர் தமது பழைய நினைவுகள் பற்றிய கட்டுரை ஒன்றில் இதைத் தெரிவித்துள்ளார்.]

தாழ்த்தப்பட்டோர் நலனில் மத்திய அரசு காட்டும் அலட்சியம்

இனியும் நீடித்தால் விளைவுகள் கடுமையாகும்

'தீண்டாமை' ஒழிப்பில் தமிழக அரசு காட்டும் அக்கறையை அறிக---நாடாளுமன்றத்தில் கா. சுப்ரவேலு அறிவுறுத்தல்

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் கா. சுப்ரவேலு (மாயூரம்) பேசுகையில், தாழ்த்தப்பட்டவர்கள் இந்த அரசினால் எந்த அளவுக்கு ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை எடுத்துக்கூறி வன்மையாகக் கண்டித்தார். அவர் ஆற்றிய உரை வருமாறு :—

தாழ்த்தப்பட்ட சாதியினர்—தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இந்த அரசாங்கம் காட்டிய அலட்சிய மனோபாவத்தையும், பொருத்தமற்ற நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டித்த மற்ற உறுப்பினர்களின் உணர்ச்சிகளிலே நானும் பங்கு கொள்கிறேன்.

அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள உறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டு, ஆண்டுதோறும் விவாதிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்கூட ஊறுகாய் போடப்பட்டுவிட்டன!

இந்த அரசாங்கம் வேண்டுமென்றே வஞ்சகமான நோக்கத்துடன்—'உயர் சாதி' என்ற எண்ணம் கொண்ட இந்துக்களை 'தாஜா' செய்யும் வகையில் இந்தச் சமுதாயத்தை முன்னேற விடாமலேயே வைத்திருக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

அரசும், பிற்பட்ட சமுதாயத்தினரின் பாதுகாவலராக 'நாடக' மாடுவதை நிறுத்திவிட்டு, நசுக்கப்பட்டுவரும் கோடிக்கணக்கான இந்த மக்களின் மேம்பாட்டுக்காக, உண்மையிலேயே ஏதாவது செய்து தீரவேண்டுமென்ற நாள் வந்துவிட்டது.

'இது ஒரு சாதாரண சாதிப் பிரச்சினைதானே' என்று தள்ளிவிட முடியாது. இது, இந்த நாட்டின் பிரச்சினைகளிலேயே மிகவும் பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தேசியப் பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும்.

மிகக் குறுகிய காலத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ருல், இந்திய நாடு முழுவதிலும் கிளர்ச்சிகளையும், புரட்சியையும் இந்த அரசாங்கம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

முதலில், சொந்த நிலம் இல்லாத விவசாயிகளின் பிரச்சினையைக் கவனிப்போம். மிகப் பெரும்பான்மையான கிராமங்களில், அடிப்படைத் தேவைகளான குடிநீர்—கக்கூசு — சாலைகள்—குடியிருப்புப்போன்ற வாழ்க்கை வசதிகள் மிகக் குறைந்த அளவில்கூட இல்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக, அரிசன மக்கள் குடியிருக்கும் அடிமனைகள் எல்லாம் தனிப்பட்டோரின் சொத்தாக உள்ளன. அந்த நிலச் சொந்தக்காரர்களின் தயவில் தான் ஏழைகள்—நாட்டின் மற்ற இனத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளையெல்லாம் இழந்து—வாழ வேண்டியிருக்கிறது.

அரசாங்கத்திற்கு உண்மையிலேயே அக்கறை யிருக்குமானுல், வெட்கக்கேடான இந்த நிலைமையை வெகு காலத்திற்கு முன்பே சீர்படுத்தி இருக்க வேண்டும். ஆனுல் சாதி உணர்ச்சிக்கு உட்பட்ட இந்தப் பிற்போக்கு அரசாங்கம, இதுபற்றி ஒன்றுமே செய்யவில்லை என்பதைத்தான் காண்கிருேம்.

அரிசன மக்கள் குடியிருக்கும் மனைகளை அரசாங்கமே வாங்கி விடுவதற்காகச் சில கோடி ரூபாய்களை ஒதுக்குவது இந்த அரசாங்கத்தால் முடியாத காரியமல்ல ; ஆனுல், மிகவும் அற்பமான ஒரு தொகையைத் தான் ஒதுக்கியிருக்கிருர்கள்.

இந்தச் சமயத்தில் காலஞ்சென்ற பரமேசுவரன் தலைமையில் தமிழக அரசு ஒரு குழுவை அமைத்ததை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்தக் குழு தனது அறிக்கையையும் வெகு நாட்களுக்கு முன்பே அளித்துவிட்டது. அதை நிறைவேற்ற மாநில அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியது ; இதுவரையில் அந்த உதவி அளிக்கப்படவில்லை.

பிற்பட்ட சமுதாயத்தின் நலனை மனத்தில் கொண்டு, மத்திய அரசாங்கம், மாநில அரசு கேட்டுள்ள நிதி உதவியை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பொருளாதாரத்தில் பிற்பட்டுள்ள தன்மை நீக்கப்பட்டாலன்றி மற்ற விஷயங்களில் இந்தச் சமுதாயத்தினரை மேம்பாடு அடையச் செய்வது என்பது முடியாத காரியம்.

இந்த அரசாங்கம் உண்மையாகவும் நேர்மையாகவும் காரியமாற்ற விரும்பினுல், குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட பழங்குடிகளுக்கான ஆணையாளரின் அறிக்கையில் சிபாரிசு செய்துள்ள காரியங்களை மட்டுமாவது செயல்படுத்தட்டும். அத்துடன், தீண்டாமை ஒழிப்புக்காக இளையபெருமாள் குழு கூறியுள்ள இடைக்கால யோசனைகளையும் சிபாரிசுகளையும் மேலும் காலம் கடத்தாது நிறைவேற்றக் கோருகிறேன்.

இந்தக் குழுவின் தலைவருக்கு (இளையபெருமாள்) சிதம்பரம் நகரில் ஒரு வீடு இருக்கிறது ; அந்த இடத்தில் நிலவிய சாதி நம்பிக்கைகளின் காரணமாக அவர், தமது சொந்த வீட்டிற்கே குடிபோக முடியவில்லை என்பதை, அவையினர் தெரிந்து கொள்வது நல்லது என நினைக்கிறேன். திரு. மு. கருணாநிதி அவர்கள், இந்தப் பிரச்சினையை தமிழகச் சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து—அவையில் விவாதிக்கப்பட்ட பிறகுதான் பிரச்சினை தீர்ந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நிலையே இப்படியென்ருல், இந்தச் சமுதாயக் கொடுமை காரணமாக மற்றவர்கள் எத்தனை தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருப்பர் என்பதை அவையினரே யூகிக்கலாம்.

அடுத்து, வேலைவாய்ப்புகளைப் பற்றிக் கவனிக்கலாம் ; அவ்வப்போது அரசாங்கம் அளித்து வந்த சில சாதாரண வாக்குறுதிகளைக்கூட காப்பாற்றுவதற்குச் சிரத்தையுடன் எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை, வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயக் கொடுமைகளுக்கு எதிராக இச்சமுதாய மக்கள் கிளர்ந்தெழாமல் இருப்பதற்காக—ரொட்டித் துண்டுகளைப் போல் இந்த வாக்குறுதிகளைப் பயன்படுத்துவார்களோ. என நான் அஞ்சுகிறேன்.

இனியாவது, 'தீண்டாமை' எனப்படும் சமுதாயக் கொடுமை ஒழிக்கப்படுவதற்கும், ஆதித் திராவிட மக்களின்—மனிதத் தன்மைக்கு ஒவ்வாத பிற்போக்கான வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உருப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

இதன் தொடர்பாக எங்கள் மாநில அரசு கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையிலே எடுத்துள்ள நடவடிக்கைகளையும், மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியில் சலுகைகள் காட்டப்படுமானுல் கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படும்.

இந்த நாட்டின் முதுகெலும்பு போன்ற பிற்பட்ட சமூகத்தினர் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்பதில் உண்மையிலேயே நாட்டம் இருக்குமானுல், இதுபோன்ற வழிகள் மத்திய அரசுக்குப் புலப்படும்."

மருந்துக் கலவையாளர்களின் புனித சேவை!

முதலமைச்சர் அண்ணு பாராட்டும் உறுதிமொழியும்

"சமுதாயத்தில் மனித உயிர்களைக் காக்க வைத்துக்கொண்டிருக்கும் நிலைமைக்கு மருந்துக் கலவை இன்றியமையாததாகும். நீங்கள் செய்வது கலவையாக இருந்தபோதிலும் இன்னெரு புறத்தில் கலப்படம் தீரா வியாதியாக இருக்கின்றது!

"மருந்துக் கலவையாளர்கள் எந்தவித ஐயப்பாட்டிற்கும் உரியவர்களல்லர்! ஆனுல் கலப்படக்காரர்கள் அப்படியல்லர்—சமூக விரோதிகளாகக் கருதப்படக்கூடியவர்களாவார்கள்!

"நீங்கள் புரிகின்ற பணியில் எத்தனையோ சிரமங்களையெல்லாம் கடந்து செய்கின்ற சேவைதான் புனிதத்தன்மை வாய்ந்ததாகும்!

"உங்களுடைய உற்சாகமிக்கப் பணியால் நாட்டின் பிணியாளர்களின் எண்ணிக்கை குறைய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அப்போதுதான் தமிழக அரசுக்கு உங்களுடைய ஒத்துழைப்பு நிறைவு செய்யப்பட்டதாகக் கருத முடியும்.

"நீங்கள் சோர்வடைந்தால், சமுதாயத்துக்கு அது மாபெருங் கெடுதலாக மாறிவிடும்!"

"உங்களுக்குக் குறைகள் நிறைய இருக்கலாம் ; அவைகளை அதிகாரிகளிடத்திலும், அமைச்சா சாதிச் பாட்சா அவர்களிடமும் கூறித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன்."

—பருந்தாளுநர் மாநாட்டில்

மேலவை இடைத்தேர்தல்

பட்டதாரி வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதி

தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு, சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து ஆகஸ்டு 21-ஆம் நாள் நடைபெறும் இடைத் தேர்தலில் வாக்குப் பதிவு நேரம் காலை 9-மணி முதல் பிற்பகல் 3 மணிவரையாகும்,

சென்னை நகரில் இதற்கென அமைக்கப்பட்குருக்கும் வாக்குச் சாவடிகளுக்கு வாக்காளர்கள் நேரில் சென்று தங்கள் வாக்கைப் பதிவு செய்ய வேண்டும்.

சென்னை நகரிலும், செங்கற்பட்டிலும் உள்ள அரசு அலுவலகங்களில் வாக்காக்காளர்களாக இருக்கும் பட்டதாரி ஊழியர்கள், தங்கள் வாக்கைப் பதிவு செய்வதற்காக, அலுவல் நேரத்தில் இரண்டு மணிநேரம் எடுத்துக் கொள்ள மாநில அரசு அனுமதித்துள்ளது.

இவ்வித வசதியை, சென்னை நகரிலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள்—தனியார் நிறுவனங்கள்—பாங்கிகள், கார்ப்பரேஷன்கள் முதலியவற்றின் ஊழியர்களுக்கும் அளிக்குமாறு, அவற்றின், நிர்வாகிகளை அரசு கேட்டுக்கொள்கிறது.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

அதிகாரி, மற்றும் அதிகாரிகள் சிறப்பாக பணிபுரிந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சஞ்சியும், சோறும் கழகத் தோழர்களால் தொடர்ந்து அளிக்கப்பட்டன. கழகத்தவரின் சீரிய பணி குறித்து பொதுமக்கள் போற்றுகின்றனர். வட்டச் செயலாளர் ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ. வந்து பார்வையிட்டு ஆறுதல் கூறித் தக்க உதவி கிடைக்க ஆவன செய்துவருகிருர்.

சிலம்புக்கு ஆடும் பூசாரி அல்ல!

காங்கிரசாருக்கு அண்ணு தரும் பதில்

"'அரிசி இல்லை' என்கிற பேச்சு இன்று தமிழகத்தில் இல்லை ! ஆனுல் சென்ற ஆண்டில், காலை 7 மணிக்கு அரிசிக்காக நின்றவர்கள், மாலை 6 மணி வரையில் கொதிக்கும் வெயிலில் நின்றுவிட்டு, 'இல்லை' என்று திரும்பிப்போனவர்கள் அதிகம் ! இதைவிட, நான்கு நாட்கள் கழித்து குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிய ஒரு கர்ப்பிணித்தாய், அரிசிக்காக நின்ற வரிசையில் இடிபட்டு—வலி தாளாது அங்கேயே குழந்தையைப் பெற்றதாகச் செய்திகள் படித்தோம் !

"இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க தி. மு. க. அரசு, போதிய அளவு நெல் கொள்முதல் செய்து, 'ரூபாய்க்குப் படி அரிசி'த் திட்டத்தை அமுலாக்கிவருகிறது; இதையும் திட்டமிட்டு, படிப்படியாகத்தான் செய்துவர வேண்டும்.

"இப்படிப் படிப்படியாகச் செய்கிற காரியம் சிலருக்குப் பிடிக்கவில்லை; 'ஏன் ஒரேயடியாகப் போடவில்லை? சென்னையிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் மட்டுந்தானு?' என்று, தெரிந்தோ தெரியாமலோ பேசிவருகிருர்கள்.

"நாமாவது, படிப்படியாக அடியெடுத்து வைக்கிருேம்; ஆனுல் முன்பு ஆண்டவர்கள், நகரக்கூட இல்லையே! அப்படிப்பட்டவர்கள்தான் நம்மைப் பார்த்து 'ஏன் ஒரேயடியாகத் தாண்டவில்லை?' என்கிருர்கள்!

"அடியெடுத்து வைப்பதிலும், 'முன்காலுக்கு ஏற்றபடி பின் காலும் வருகிறதா' என்று பார்த்துத்தான் அடியெடுத்து வைக்க வேண்டும்.

"சிலம்புக்கு ஆடும் பூசாரிபோல், காங்கிரசார் பேச்சுக்கு நாம் நாம் பதில் சொல்லத் தேவையில்லை ! சிலம்புக்கு ஆடுபவன் இந்த அண்ணுத்துரை அல்லன் !

"எங்களால் முடியவில்லையென்ருல், மக்களைக் கூட்டிவைத்துச் சொல்லிவிட்டுப் போய்விடுவோம் ! எங்களைவிட யாராவது அதிகமாகச் செய்ய முடியும்—சாதிக்க முடியும் என்ருல், அவர்களுக்கு நானே கொடி பிடித்து—வழிநடத்தி—கோட்டையிலே கொண்டுசென்று உட்கார வைத்துப் போட்டோ படம் பிடிக்கவும் தயாராக இருக்கிறேன் !

"**தமிழக அரசின் மாபெரும் திட்டம்—இந்தப் படியரிசித் திட்டம்; அது வெற்றி பெற பொதுமக்கள் ஒத்துழைப்பு நிறைய வேண்டும் ; 'ஒத்துழைப்பு' என்ருல், 'இரண்டு பேர் உள்ள வீட்டிற்கு இரண்டு பேர்களுக்கு மட்டுமே அரிசி வாங்க வேண்டும்' என்பதுதான் !**

"உலகப் போரின்போது, இங்கிலாந்து நாட்டில் துணிக்கு 'ரேஷன்' வந்தது ; அப்போது சட்டை தைப்பவர்கள். முன் பக்கம் மட்டும் துணியிருப்பதாக வைத்துத் தைத்துக்கொண்டு பின் பக்கத்தைக் கோட்டால் மறைத்து அணிந்துகொள்வார்களாம் ! இப்படிச் சட்டைக்குப் பின்பக்கம் துணி இல்லாமல் தைப்பதால் மீதமாகும் துணி, 'வேறு பல மக்களுக்கு உதவுமே' என்கிற எண்ணத்தில் அப்படி ஒத்துழைத்தார்களாம் மக்கள் !

"அப்படிப்பட்ட ஒத்துழைப்பை உங்களிடமிருந்து நான் கேட்கவில்லை ; உங்களுக்குத் தேவையான மட்டும் அரிசி வாங்குங்கள் ; ஆளே இல்லாமல், ஆள் இருப்பதாகக் கணக்குக் காட்டிப் பெற முயலாதீர்கள் ! இதைச் சொல்லக் காரணம், நமது மக்களிடை பொறுப்புணர்ச்சி அவ்வளவாக காணப்படாததுதான் !

"உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும், இயற்கைச் சூழ்நிலை நல்லமுறையில் இருப்பதுபோல் நமது எண்ணங்களும் நல்ல முறையில் இருக்கவேண்டும் ! வெற்றி நமது பக்கமே !

"நாடு நலமுற்றதும், இன்று கோட்டையிலே இருக்கும் நாங்கள்—நீங்களாகவே பார்த்து, 'இருங்கள், இருங்கள்' என்ருலும்—விலகிக்கொண்டு, அவர்களைக் கொண்டுபோய் வைக்க நாங்களாகவே முயற்சிப்போம் ! நாங்கள் மட்டுமா கோட்டையிலே எப்போதும் இருக்க விரும்புவோம்—நாட்டின் நலன்தான் எங்கள் நோக்கம் !"

—15—8—67 அன்று அம்பத்தூரில் நடந்த படி அரிசித் திட்ட துவக்கவிழாக் கூட்டத்தில்

ஆறுகாட்டுத்துறையில் தீ விபத்து

200 குடிசைகள் எரிந்து சாம்பலாயின—ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள பொருள் நாசம்

பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்கட்கு கழகத் தோழர்கள் ஆறுதல்

திருத்துறைப்பூண்டி அடுத்த தோப்புத்துறைக்கு அருகிலுள்ள ஆறுகாட்டுத்துறையில் கடந்த 9—8—67 அன்று ஏற்பட்ட தீ விபத்தினுல் இருநூறு வீடுகளுக்கு மேல் முழுமையாகப் பாதிக்கப்பட்டு, ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேல் இழப்பும் ஏற்பட்டிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

அங்கு வாழும் மக்கள் அனைவரும் மீனவர்கள். அன்று பெரும் பகுதியினர் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றிருந்தனர். மீன் பிடிப்பதற்கு உதவியாக இருந்த சாதனங்கள் அனைத்தும் தீக்கிரையானது நெஞ்சை உருக்குகிறது.

தஞ்சை மாவட்டத்திலேயே இம்மாதிரியான தீ விபத்து இதுவரை நடந்ததே இல்லை என்று கூறப்படுகிறது.

மன்னார்குடி—திருவாரூர் தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் போராடியும், மறுநாள் மாலை 4 மணியளவில்தான், தீயை அணைக்க முடிந்தது.

விபத்து நடந்த இடத்தில் தி. மு. கழகத் தோழர்கள் தோப்புத்துறை செ. யூசுப், தா. சிவசுந்தரம், மற்றும் கருணை கமால், இ. அமீது சுல்தான், திராவிடர் கழகத் தோழர் பரமசிவம், ஒய். சாகுல் அமீது சகோதரர்கள், எஸ். என். எம். சாலீஹ், எம். மீரா உசேன், எஸ். எம். பி. காதர், சர்புதீன், சேக்முகம்மது, முகைதீன் பிச்சை, ஜெயப்பிரகாஷ் ஆகியோர் உடனிருந்து ஆறுதலும் உதவியும் புரிந்தனர். இவர்களுக்கு உறுதுணையாக, பேரூராட்சி மன்ற நிர்வாக

(8-ம் பத்தி பார்க்க)

மேலவைத் தேர்தலில் க. அறிவழகனுக்கு ஆதரவு தருக!

செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தலில் போட்டியிடும் தோழர் க. அறிவழகன் எம்.ஏ. அவர்கட்கு ஆதரவு தருமாறு செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. செயலாளர் சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. அவர்கள் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்:—

"சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியின் சார்பில் ஆக. 21-ல் நடைபெறவிருக்கும் தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தலில், கடந்த பன்னிரண்டு ஆண்டுக்காலமாக ஆசிரியர் பணியில் ஈடுபட்டு, ஆசிரியர் பெருமக்களின் நல்வாழ்விற்காகவும், உரிமைக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்துவரு பவரும்—பொருளாதார ஆசிரியராகப் பணியாற்றி வந்தவரும்—தமிழகப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கச் செயலாளருமாகப் பொறுப்பேற்று ஆசிரியர் பெருமக்களுக்கு அரும்பணியாற்றித் திறனுய்ந்து உறையாற்றும் செம்மலும் — நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் எம்.ஏ. அவர்களின் அருமைத் தம்பியுமான திரு. க. அறிவழகன் எம்.ஏ. அவர்களின் வெற்றிக்குத் தாங்கள் பெருந்துணை புரிந்து அவர் வெற்றிபெற உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்."

தமிழக மின் ஆயம்

அறிவிப்பு

இதுகாறும் பரமக்குடியில் செயல்பெற்று வந்த, இராமநாதபுரம் மின்திட்ட கோட்டப் பொறியாளர் அலுவலகம், பரமக்குடியிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றப்பெற்று 8—8—1967-ந் தேதி முதல் இராமநாதபுரத்தில் செயல்பெற்று வருகிறது. மேற்கண்ட அலுவலகத்திற்குரிய கடிதங்களை இனி "கோட்டப் பொறியாளர், தமிழக மின் ஆயம், இராமநாதபுரம்" என்று விலாசமிட்டுத் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கோரப்படுகிறார்கள்.

மேற்பார்வை மின் பொறியாளர்

இராமநாதபுரம் மின் திட்டம்

Madras State Electricity Board

MADRAS ELECTRICITY SYSTEM

(Generation)

TENDER NOTICE

Specification No. SEG/BB. 7 1967—68

MADRAS ELECTRICITY SYSTEM—B B P S—Supply, fabrication, erection and commissioning of timber louvres etc. for N G C T. No. ?—Specification SEG BB. 7/67-68.

SEALED TENDERS superscribed as above will be received by the undersigned upto 2 P. M. on Thursday the 14th September 1967. The tenders will be opened at 3-30 P. M. on the same day in the presence of such of the tenderers or their representatives as may be present. Copy of Specification No. SEG. BB. 7/67-68 with drawings, schedules etc can be had from the Deputy Chief Accountant/Generation, Basin Bridge Power House, Madras-12 on payment of Rs. 10.25 inclusive of Sales tax either by Cash or Money Order. The above amount is not refundable under any circumstances

The Board reserves the right to reject any tender or all the tenders without assigning any reasons therefor.

SUPERINTENDING ENGINEER

M.E.S. (Generation)

Basin Bridge Power House

Madras-12

நடக்க இருப்பவை

20--8--67

பெங்களூர்

கலைஞர் கருணாநிதி மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு நாகேந்திரா கார்டன் சேவா சிரமம் பள்ளி அருகில்; தலைவர்: வி. எஸ். கண்ணன்; பேசுவோர்: வெ. கண்ணன், எஸ். வி. பதி, கிள்ளிவளவன் பி.ஏ.,பி.எல்., திராவிடமணி, ப. நடராசன்.

திருப்பூர்

தி.மு.க. தொழிற் சங்கங்கள் சார்பில் அமைச்சர் செ. மாதவனுக்கு வரவேற்பு; இரவு 7 மணிக்கு நகர மண்டபத் திடலில்; தலைவர்: இரா. முருகேசன்; பாராட்டுவோர்: உடுமலை ப. நாராயணன் எம்.பி., காட்டூர் ப. கோபால், து. துரைசாமி எம்.எல்.ஏ., வே. சுப்பிரமணியம்.

காரைக்குடி

எழுச்சி மன்றத் துவக்க விழா; இரவு 7 மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: எஸ். எஸ். முத்து; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, சித. சிதம்பரம், சேவற்கொடியோன், சி. மோகன் பி.காம்., பி.எல்,, ஆ. குறள்பித்தன், செ. முனியாண்டி, மற்றும் பலர்.

மதுரை 6-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்ற நான்காவது ஆண்டு விழா; ஓர்க்ஷாப் ரோட்டில் (ஆறுமுச்சந்தி); தலைவர்: பி. இராமச்சந்திரன்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எஸ். முத்து எம்.எல்.சி., ஜி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ., பி.எல்., மற்றும் பலர்.

கல்கத்தாவில் பாரதிதாசனர் விழா

வங்கத் தமிழர் சங்கத்தின் சிறப்பான ஏற்பாடு

ஆகஸ்டு திங்கள் 20-ம் நாள் கல்கத்தாவில் (அவுரா) உள்ள வங்கத் தமிழர் சங்கத்தில், பாவேந்தர் பாரதிதாசனர் விழாவும், சங்க இலவசத் (தமிழ்த்) தொடக்கப் பள்ளியின் மூன்றுவது ஆண்டு நிறைவு நாளையொட்டி வெளியிடப்படும் மலர் வெளியீட்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

விழாவில் இங்கரிலேயே ஏராளமான தமிழக வணிகப் பிரமுகர்களும், சிறந்த தமிழ் சொற்பொழிவாளர்களும், மற்றும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரைகள் வழங்க இருக்கின்றனர்.

தமிழனைவரின் பாராட்டுதலைப் பெற்ற இசைத்தென்றல் முத்து, பாரதிதாசனரின் பாடல்களைப் பாட பள்ளிப் பிள்ளைகள் ஆடும் நடன நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறுகின்றன.

சங்கப் பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாக சீருடைகள், புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டு, வாய்ப்பாடு மற்றும் எழுது பொருள்கள் விழாவன்று வழங்கப்படும்.

$5\frac{3}{4}$ சதவிகித மாநில அரசாங்கக் கடன்கள் -- 1967

மாநிலம்	தொகை (கோடி ரூபாய்களில்)	வெளியீட்டு விலை நூற்றுக்கு ரூ.	மாநிலம்	தொகை (கோடி ரூபாய்களில்)	வெளியீட்டு விலை நூற்றுக்கு ரூ.
1. ஆந்திரப் பிரதேசம்	10.00	97.00	9. மகாராட்டிரம்	20.00	99.00
2. அசாம்	2 50	97.00	10. மைசூர்	6.50	97.00
3. பீகார்	5.00	97.00	11. ஒரிசா	4 00	97.00
4. குசராத்	10.00	99.00	12 பஞ்சாப்	3.00	97.00
5. அரியாளு	2.75	97.00	13. இராஜஸ்தான்	4.00	97.00
6. கேரளம்	4.50	97.00	14. உத்தரப் பிரதேசம்	12.00	98.00
7. மத்தியப் பிரதேசம்	5.50	97.00	15. மேற்கு வங்காளம்	8.00	98.00
8. தமிழ் நாடு	17.00	98.00			

இந்தக் கடன்கள் எல்லாவற்றுக்கும் தொகைகள் செலுத்துதல் 1967 செப்டம்பர் 1-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று தொடங்கி, 1967 செப்டம்பர் 9-ந் தேதி சனிக்கிழமையன்றோ, அல்லது ஒவ்வொரு கடன் வெளியீட்டுக்கும் ஏறக்குறைய ஈடான தொகை வசூலானவுடன் அதற்கு முன்னதாகவோ, அறிவிப்பு இல்லாமல் முடியும். கடன் கோரி அறிவிக்கப்பட்ட தொகைகளுக்கு அதிகமாகப் பத்து சதவிகிதம் வரையிலான தொகைகளைத் தம்மிடம் வைத்துக்கொள்ள எல்லா மாநில அரசாங்கங்களும் உரிமை பெற்றுள்ளன.

இந்தக் கடன்கள் 12 ஆண்டுகளுக்குப் பிறகு—அதாவது, 1979 செப்டம்பர் 1-ந் தேதியன்று—சமத் தொகையில் மீட்டுக்கொள்ளத்தக்கவையாகும். இவற்றுக்கான வட்டி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை—அதாவது, ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 1-ந் தேதியன்றும், செப்டம்பர் 1-ந் தேதியன்றும்—அளிக்கப்படும்.

எல்லாக் கடன்களுக்கும் விண்ணப்பத் தொகைகளை ரொக்கமாகவோ அல்லது செக்காகவோ செலுத்தலாம்.

கீழ்க்காணும் கடன்களின் செக்யூரிடிகளும்கூட, அந்தந்த மாநிலங்களின் புதிய கடன்களாக சமத் தொகையில் மாற்றிக்கொள்ளுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படும் :—

மாற்றிக்கொள்ள அளிக்கப்படும் கடனின் பெயர்	வழங்கப்பட வேண்டியதான புதிய கடனின் பெயர்
1. 4% ஆந்திர மாநில அபிவிருத்திக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ ஆந்திரப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன்—1979.
2. 4% பீகார் மாநில அபிவிருத்திக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ பீகார் மாநில அபிவிருத்திக் கடன்—1979.
3. 4% மத்தியப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ மத்தியப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன்—1979.
4. 4% தமிழ்நாடு கடன்—1967.	$5\frac{3}{4}\%$ தமிழ்நாடு கடன்—1979.
5. 4% பம்பாய் மாநில அபிவிருத்திக் கடன்—1967— 4% சௌராட்டிர மாநில அபிவிருத்திக் கடன் (இரண்டாவது தொடர்)—1967.	$5\frac{3}{4}\%$ மகாராட்டிர மாநில அபிவிருத்திக் கடன்—1979.
6. 4% மைசூர் மாநில அபிவிருத்திக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ மைசூர் மாநில அபிவிருத்திக் கடன்—1979.
7. 4% உத்தரப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ உத்தரப் பிரதேச மாநில அபிவிருத்திக் கடன்—1979.
8. 4% மேற்கு வங்காளக் கடன்—1967.	$5\frac{3}{4}\%$ மேற்கு வங்காளக் கடன்—1979.

மாற்றிக்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட செக்யூரிட்டிகளுக்கு 1967 ஆகஸ்டு 31-ந் தேதி (உட்பட) ஆண்டுக்கு 4% வட்டி அளிக்கப்படும்.

இந்தக் கடன்கள் எல்லாவற்றுக்குமான விண்ணப்பங்கள்—பெங்களூர், பம்பாய் (கோட்டை மற்றும் பைகுல்லா), கல்கத்தா, கான்பூர், சென்னை, நாகபுரி மற்றும் புதுடில்லியில் உள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவலகங்களிலும், பாட்னவில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளையிலும், மற்றும் ஐதராபாத்தில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் ஐதராபாத்தின் கிளையிலும் பெற்றுக்கொள்ளப்படும்.

அந்தந்த மாநிலங்களுக்குள் உள்ளவையான கீழ்க்காணும் மற்ற இடங்களிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் :—

(i) அரசாங்கத்தின் டிரஷரி வேலையை நடத்திவரும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை பாங்கிகளுடைய கிளைகள்.

(ii) அரசாங்கத்தின் டிரஷரி வேலையை நடத்திவரும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை பாங்கிகளின் கிளைகள் இல்லாத இடங்களில், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளைகள்.

(iii) மேற்கூறப்பட்ட கிளைகள் இல்லாத இடங்களில் டிரஷரிகள் மற்றும் துணை டிரஷரிகள் (அசாம் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்கள் நீங்கலாக).

பஞ்சாப் மற்றும் அரியாளு மாநில அரசாங்கக் கடன்களுக்கான விண்ணப்பங்கள், சண்டிகாரில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலும் பெற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான தொகை பெறும் எந்த அலுவலகத்திலிருந்தும், இந்தக் கடன் அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் விண்ணப்பப் பாரங்களைப் பெறலாம்.

பெங்களூர், பம்பாய் (கோட்டை மற்றும் பைகுல்லா), கல்கத்தா, கான்பூர், சென்னை, நாகபுரி மற்றும் புதுடில்லியிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவலகங்களில் விண்ணப்பங்களை அளிக்கும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் விண்ணப்பிக்கும் கடனுக்கு அளவுக்கு மீறிய தொகை செலுத்தப்பட்டிருக்குமானால், அதற்குப் பிறகும் கடன் தொகை பெறுவதற்குரிய நிலையிலுள்ள மற்ற மாநிலக் கடன்கள் எதிலும், தாங்கள் செலுத்தித் திருப்பியளிக்கப்படக்கூடியதான ரொக்கத் தொகையை மாற்றிக்கொள்வதற்குத் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்கலாம். விண்ணப்பதாரர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்வதற்காக 'விசேட விருப்பப் பாரம்' ஒன்றைப் பூர்த்தி செய்து, அந்தப் பாரத்தைத் தங்களுடைய விண்ணப்பங்களுடன் செலுத்த வேண்டும். இந்த 'விசேட விருப்பப் பாரம்' பிரதிகளை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்கூறிய அலுவலகங்கள் எதிலிருந்தும் பெறலாம்.

அறிஞர் அண்ணு

சுற்றுப்பயணம்

★

ஆக. 22 காலை 10-மணி: சேரன்மாதேவி; 11 மணி: களக்காடு—பொதுக்கூட்டம்; 12 மணி: நாங்குனேரி —பொதுக்கூட்டம்; பிற்பகல் 2 மணி: நெல்லை மாவட்ட நீதித்துறை அதிகாரிகள் விருந்து; மாலை 4 மணி: நெல்லை ஊராட்சித் தலைவர்கள் வரவேற்பு; 4-45 மணி: பட்டா வழங்குதல்; 6-30 மணி: தூய சேவியர் கல்லூரி மாணவர்கள் வரவேற்பு; இரவு 7-30 மணி: மின் கழக ஊழியர்கள் வரவேற்பு; 9 மணி: நெல்லை—பொதுக்கூட்டம்.

ஆக. 23: காலை 10-30 மணி: பாளையங்கோட்டை; 11 மணி: திருவைகுண்டம்; பிற்பகல் 1 மணி: திருச்செந்தூர்; மாலை 3-30 மணி: வீரபாண்டியப் பட்டணம்; 5-30 மணி: தாரங்கதாரா கெமிகல்ஸ்; 6-30 மணி: தூத்துக்குடித் துறைமுக நிகழ்ச்சி; இரவு 8 மணி: தூத்துக்குடி — பொதுக்கூட்டம்; 10 மணி: கோவில்பட்டி—பொதுக்கூட்டம்.

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

ஆக. 21 காலை 9 மணி: பர்கூர்—வேளாண்மைக் கிடங்கு திறப்பு; ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11 மணி: கிருட்டினகிரி—தானியக் கிடங்கு திறப்பு விழா; பிற்பகல் 12-30 மணி: திம்மாபுரம்—அரசு பழத் தோட்டம் பார்வையிடல்; 1 மணி: கிருட்டிணகிரி நீர்த்தேக்கத் திட்டம்; மாலை 3 மணி: கிருட்டிணகிரி நீர்த்தேக்கத் திட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்; 4-15 மணி: சென்ருயம்பட்டணம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு.

க. இராசாராம் மேலைநாட்டுப் பயணம்

ஆக. 16 முதல் செப். 14-வரை செல்லும் இடங்கள்

புதுடில்லி, ஆக. 16—இன்று இங்கிருந்து மேலைநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட நாடாளுமன்ற தி.மு.க. கொறடா திரு. க. இராசாராம் அவர்கள், நேரே விமான மூலம் பிரசல்ஸ் சென்று அங்கிருந்து ஆக. 19-ம் நாள் பாரிஸ் அடைவார்; பிராங்பர்ட்டிலிருந்து ஆக. 22-ம் நாள் பிராங்க்பர்ட் போகிறார்; அங்கிருந்து கார் மூலம் ஹாம்பர்க், டஸ்ஸல்டார்ப் ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, ஆகஸ்டு 28-ம் நாம் கோபன் ஹேகன் போகிறார்.

தொடர்ந்து அவர் சுற்றுப்பயணம் செய்யும் விவரம் வருமாறு:—

ஆக. 30: ஸ்டாக்ஹோம்; செப். 1 முதல் 7-வரை: இலண்டன்; செப். 8 முதல் 10-வரை: பிராங்க்பர்ட், சூரிச், ஜினிவா; செப். 11 முதல் 13-வரை: ரோம்; 14-ம் நாள் ரோமிலிருந்து புறப்பட்டு டில்லி வந்தடைவார்.

இரா. செழியன் வெளிநாட்டுப் பயணம்

புதுடில்லி, ஆக. 16—இன்று வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. செழியன், விமான மூலம் தெஹ்ரான் சென்று—அங்கிருந்து ரோம் அடைந்து—ஆகஸ்டு 17-ம் நாள் ரோமிலிருந்து ஜினிவா சென்று—பிறகு, பிராங்க்பர்ட், பெர்லின் ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு—ஆக. 21-ம் நாள் பாரிஸ் அடைவார்; பாரிசிலிருந்து ஆக. 23-ம் நாள் இலண்டன் அடைவார்; அங்கிருந்து செப். 3-ம் நாள் மாண்ட்ரீல் சென்று, செப். 6-ம் நாள் வாஷிங்டன் அடைகிறார்.

[ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர் முதலிய நாடுகளில் மேற்கொள்ளும் சுற்றுப்பயண விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.]

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.